ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2443/57 - 2025 ජූලි මස 04 වැනි සිකුරාදා - 2025.07.04

2443/57 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 18ஆம் பிரிவின் கீழ் நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்திற்கு நிர்வாகியொருவரை நியமித்தல்

2023 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 18ஆம் பிரிவின் கீழ், இலங்கை மத்திய வங்கிக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களை அனுசரித்து, 2025.07.04 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் செயலுறு திகதியிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்காக நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இன் நிருவாகியாக திரு. பி. டபிள்யூ. டி. என். ஆர். ரொட்ரிகோ அவர்கள் இத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நியமிக்கப்பட்ட நிருவாகி 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக சொல்லப்பட்ட காலப்பகுதி முடிவடையும் வரை அல்லது இக்கட்டளை இரத்துச் செய்யப்படும் அல்லது நீடிக்கப்படும் அத்தகைய நேரம் வரை நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இன் அனைத்து சொத்துக்களினதும் உரிமைகளினதும் வியாபாரத்தினதும் மற்றும் விவகாரங்களினதும் முழுமையான கட்டுப்பாட்டைப் பொறுப்பேற்றல் வேண்டும், அத்துடன் அதன் பெயரிலும் அதன் சார்பிலும் கம்பனியின் வியாபாரத்தையும் விவகாரங்களையும் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

சொல்லப்பட்ட சட்டத்தின் 20 ஆம் பிரிவுக்கமைவாக, நிருவாகி நியமனத் திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு திகதிக்குள் நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இன் அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பொருட் பதிவேடொன்றை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும், சட்டத்தின் 21ஆம் பிரிவை அனுசரித்து, நிருவாகி நியமனத் திகதியிலிருந்து அறுபது (60) நாட்களுக்குள் நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி மிகவும் வளம்பெறத்தக்க தீர்மானத் தெரிவொன்று பற்றி விரிவான அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக, நிருவாகி, நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இன் நிதியியல் நிலைமை பற்றிய கிரமமான அறிக்கைகளை நிருவாகியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் பிரயோகம், செயலாற்றம் மற்றும் நிறைவேற்றம் தொடர்பிலான அத்தகைய தகவல்கள் அத்துடன் காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் வேண்டப்படக்கூடியவாறான அத்தகைய எவையேனும் வேறு விபரங்கள் உடன் சேர்த்து கிரமமான அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

முனைவர் **பி. நந்தலால் வீரசிங்க**<br>
இலங்கை மத்திய வங்கியின்<br>
ஆளும் சபைத் தலைவரும் ஆளுநரும்.

EOG 07-0046



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.